MAY 2022 **U/ID 32411/UCX1A**

Time : Three hours Maximum : 75 marks

PART A — (10 × 2 = 20 marks)

Answer any TEN questions.

1. Mention the objectives of accounting.
கணக்கியலின் நோக்கங்களை குறிப்பிடுக.

2. What are accounting convention?
கணக்கியல் மரபுகள் என்பன யாவை?

3. Distinguish between journal and ledger.
குறிப்பேடு மற்றும் பேரேடு இடையேயான வேறுபாட்டினைத் தருக.

4. Define the term trial balance.
இருப்பு ஆய்வு பட்டியல் என்பதன் இலக்கணம் தருக.

5. What is the aim of preparing final accounts?
ஆண்டு இறுதிக் கணக்கின் தயாரிப்பதன் நோக்கம் என்ன?

6. Give the meaning of balance sheet.
இருப்பு நிலைக் குறிப்பேடு என்பதன் பொருள் தருக.

7. What do you mean by sacrificing ratio?
தியாகவிகிதம் என்றால் என்ன?

8. State the causes for depreciation.
தேய்மானம் வருவதற்கான காரணங்களை குறிப்பிடுக.

9. What do you mean by annuity method of depreciation?
ஆண்டுத் தொகை முறை தேய்மானம் என்றால் என்ன?

10. Define the term single entry system.
ஒற்றைப் பதிவு முறை என்பதன் இலக்கணம் தருக.

11. List the features of single entry system.
ஒற்றைப் பதிவு முறையின் சிறப்பியல்புகளை தருக.

12. What is meant by insurance claims?
காப்பீட்டு கோரிடல் என்றால் என்ன?

PART B — ($5 \times 5 = 25$ marks)

Answer any FIVE questions.

13. What do you mean by double entry system of book – keeping? What are its merits?

இரட்டை பதிவு முறை ஏடுகளை பராமரித்தல் என்றால் என்ன? அதன் நன்மைகள் யாவை?

14. State the differences between receipts and payments account and income and expenditure account.

பெறுதல் செலுத்துதல் கணக்கிற்கும் வருவாய் செலவினக் கணக்கிற்கும் இடையே உள்ள வேறுபாடுகளைக் கூறுக.

15. Anand started his business with Rs. 10,000 of these he paid Rs. 9,000 into bank. His cash transaction were as follows, Record it in a single column cash book.

2018
July
1. Purchased stationary with cash Rs. 40
2. Purchased goods with cash Rs. 650
3. Purchased table for cash Rs. 200
4. Cash sales Rs. 150
5. Received from Gopal as advance Rs. 200
6. Paid Sethu cash Rs. 140
7. Cash sales Rs. 160

ஆனந்த் தன் வியாபாரத்தை ரூ. 10,000 முதலீடு செய்து தொடங்கினார். அதில் ரூ. 9,000 வங்கியில் செலுத்தினார். அவருடைய ரொக்க நடவடிக்கைகளை ஒரு பத்தி ரொக்க ஏட்டில் பதிவு செய்க.

2018
ஜூலை
1. அச்சுப் பொருள் வாங்கியது ரூ. 40
2. சரக்கு வாங்கியது ரொக்கத்திற்கு ரூ. 650
3. மேஜை வாங்கியது ரூ. 200
4. ரொக்க விற்பனை ரூ. 150
5. கோபாலிடம் முன்பணம் பெற்றது ரூ. 200
6. சேதுக்கு ரொக்கம் கொடுத்தது ரூ. 140
7. ரொக்க விற்பனை ரூ. 160

16. Mr. Guru maintains books on single entry system he gives you the following information.

Capital on 1.1.2018 Rs. 15,200

Capital on 1.1.2019 Rs. 16,900

Drawings made during year 2018 Rs. 4,800

Capital introduced during the year 2018 Rs. 2000. You are required to calculate the profit made by Mr. Guru during the year 2018.

திரு. குரு ஒற்றைப் பதிவு முறையில் கணக்குகள் வைத்துள்ளள். அவர் கீழ்வரும் தகவல்களை அளித்துள்ளார்.

1.1.2018 அன்று மூலதனம் ரூ. 15,200

1.1.2019 அன்று மூலதனம் ரூ. 16,900

2018ம் ஆண்டு எடுப்பு ரூ. 4,800

2018ம் ஆண்டு அளித்த மூலதனம் ரூ. 2,000

2018ம் ஆண்டிற்கு குரு ஈட்டிய இலாபத்தினைக் கணக்கிடுக.

17. On 1.1.2011 a company purchases a machinery worth Rs. 2,00,000 on 1st July 2012 it buys additional machinery worth Rs. 50,000 and spent Rs. 5,000 on its installation. The accounts are closed on 31st December. Annual depreciation 10%.

Show the machinery account for 5 years under written down value method.

ஜனவரி 1, 2011 அன்று ஒரு நிறுவனம் ரூ. 2,00,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கியது. ஜூலை 1, 2012 அன்று ரூ. 50,000 மதிப்புள்ள இயந்திரத்தை வாங்கி அதை நிறுவுவதற்கு ரூ. 5,000 செலவு செய்தது. அந்த நிறுமம் கணக்கை டிசம்பர் 31ல் முடிக்கிறது. தேய்மானம் 10%.

இயந்திரக் கணக்கை 5 ஆண்டுகளுக்கு எழுதப்பட்ட மதிப்பு தேய்மான முறையில் எழுதுக.

18. Fire occurred in the premises of X Ltd on 10th October 2003. All stocks were destroyed except to the extent of Rs. 6,200. From the following figures ascertain the loss suffered by the company.

	Rs.
Stock on 1st January 2002	36,000
Purchases during 2002	1,45,000
Sales during 2002	2,00,000
Stock on 31.12.2002	22,500
Purchases during 2003 upto date of fire	1,46,000
Sales during 2003 upto date of fire	1,89,000

X நிறும வளாகத்தில் 2003 அக்டோபர் 10ல் தீ விபத்து ஏற்பட்டது. ரூ. 6,200 மதிப்புள்ள சரக்கைத் தவிர ஏனைய சரக்குகள் அனைத்தும் அழிந்துவிட்டன. கீழ்க்கண்ட விபரங்களிலிருந்து நிறுமத்திற்கு ஏற்பட்ட இழப்பைக் கணக்கிடுக.

	ரூ.
2002 ஜனவரி 1ல் சரக்கிருப்பு	36,000
கொள்முதல் 2002ல்	1,45,000
விற்பனை 2002ல்	2,00,000
டிசம்பர் 31.12.2002 ல் சரக்கிருப்பு	22,500
கொள்முதல் 2003ல் தீ விபத்து வரை	1,46,000
விற்பனை 2003ல் தீ விபத்து வரை	1,89,000

19. A, B and C are partners sharing profits equally. They admit D into partnership for 1/4th share is the future profit. D is to bring in Rs. 9,000 for goodwill. They withdraw half of the goodwill. Journalise.

A, B மற்றும் C சமபங்கு கூட்டாளிகள். அவர்கள் D என்பவரை 1/4 லாபத்திற்குச் சேர்க்கின்றனர். Bன் மதிப்பாக ரூ. 9,000 D கொண்டுவருதல் வேண்டும். Bன் மதிப்பில் பாதி தொகையை பழைய கூட்டாளிகள் எடுத்துக் கொள்கின்றனர். முதற் குறிப்பேட்டு பதிவுகளைத் தருக.

PART C — ($3 \times 10 = 30$ marks)

Answer any THREE questions.

20. Journalise the following transaction.

(a) Started business with cash Rs. 10,000

(b) Purchased goods for Rs. 4,000

(c) Sold goods for Rs. 5,500

(d) Paid electric charges Rs. 1,850

(e) Paid into bank Rs. 4,100

(f) Received interest Rs. 850.

கீழ்க்கண்ட நடவடிக்கைகளுக்கான குறிப்பேடுகள் தருக.

(அ) தொழில் தொடங்க ரொக்கமாக ரூ. 10,000

(ஆ) பொருள்கள் கொள்முதல் செய்தது ரூ. 4,000

(இ) விற்பனை செய்த பொருள்கள் ரூ. 5,500

(ஈ) மின் கட்டணம் செலுத்தியது ரூ. 1,850

(உ) வங்கியில் பணம் செலுத்தியது ரூ. 4,100

(ஊ) பெறப்பட்ட வட்டி ரூ. 850.

21. From the following trail balance prepare trading and profit and loss a/c for the year ended 2018 and a balance sheet as on that date.

Debit balance	Rs.	Credit balance	Rs.
Stock	10,400	Capital	80,000
Debtors	5,000	Sales	50,000
Purchases	30,000	Creditors	2,000
Salaries	4,000		
Rent	3,000		
Insurance	600		
Drawings	10,000		
Machinery	56,000		
Bank	9,000		
Cash	4,000		
	1,32,000		1,32,000

Adjustments :

(a) Closing stock Rs. 9,800

(b) Salaries outstanding Rs. 600

(c) Rent paid in advance Rs. 400

(d) Depreciate machinery at 10%

(e) Bad debts written off Rs. 500.

கீழே கொடுக்கபபட்டடுள்ள இருப்பு ஆய்வு பட்டியலிலிருந்து 2018ம் ஆண்டின் வியாபார இலாப நட்டக் க/கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தயார் செய்க.

பற்று இருப்புகள்	ரூ.	வரவு இருப்புகள்	ரூ.
சரக்கிருப்பு	10,400	மூலதனம்	80,000
கடனாளிகள்	5,000	விற்பனை	50,000
கொள்முதல்	30,000	கடனீந்தோர்	2,000
சம்பளம்	4,000		
வாடகை	3,000		
காப்பீடு	600		
எடுப்பு	10,000		
இயந்திரம்	56,000		
வங்கி	9,000		
ரொக்கம்	4,000		
	1,32,000		1,32,000

சரிக்கட்டல்கள் :

(அ) இறுதிச் சரக்கிருப்பு ரூ. 9,800

(ஆ) கொடுபட வேண்டிய சம்பளம் ரூ. 600

(இ) முன்கூட்டி செலுத்திய வாடகை ரூ. 400

(ஈ) இயந்திர மீதான தேய்மானம் 10%

(உ) வராக்கடன் நீக்கியது ரூ. 500.

22. Dharmu, Lingam and Babu are partners sharing profits in the ratio of 3 : 2 : 1. On 31st December 2019 their balances sheet was.

	Rs.		Rs.
Sundry creditors	13,500	Cash	8,900
General reserve	6,000	Debtors	9,000
Capital :		Stock	12,690
Dharmu	15,090	Building	24,000
Lingam	10,000		
Babu	10,000		
	54,590		54,590

On the same day Lingam retired under the following arrangements :

(a) Building to be appreciated by Rs. 8,500

(b) Stock to be reduced by Rs. 1,000

(c) Goodwill to be raised for Rs. 9,000

(d) Lingam is to be paid Rs. 5,000 immediately and the balance on loan.

Give necessary ledger accounts and balance sheet.

தர்மு, லிங்கம், பாபு மூவரும் 3 : 2 : 1 என்ற விகிதத்தில் இலாபம் பங்கீட்டுக் கொள்ளும் கூட்டாளிகள் 2019ம் ஆண்டு டிசம்பர் 31ல் இருப்பு நிலைக் குறிப்பு வருமாறு.

	ரூ.		ரூ.
கடனீந்தோர்	13,500	ரொக்கம்	8,900
பொதுக் காப்பு	6,000	கடனாளிகள்	9,000
மூலதனம் :		சரக்கிருப்பு	12,690
தர்மு	15,090	கட்டிடம்	24,000
லிங்கம்	10,000		
பாபு	10,000		
	54,590		54,590

அதே தேதியில் லிங்கம் விலகினார். கீழ்க்கண்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

(அ) கட்டிடடம் ரூ. 8,500 அதிகரிக்க வேண்டும்.

(ஆ) சரக்கிருப்பு ரூ. 1,000 குறைக்க வேண்டும்.

(இ) நற்பெயர் ரூ. 9,000 உருவிக்கவும்.

(ஈ) லிங்கத்துக்கு உடனடியாக ரூ. 5,000 தரப்பட வேண்டும் மீதியை கடனாக கருதப்பட வேண்டும்.

தேவையான பேரேட்டுக் கணக்குகள் தந்து இருப்பு நிலைக் குறிப்பை தயார் செய்க.

23. A second hand machine was purchased for Rs. 30,000 on 1.1.2015 and spent Rs. 6,000 and Rs. 4,000 for repairs and installation respectively. On 1.7.2016 another machine was purchased for Rs. 26,000. On 1.7.2017 the first machine become obsolete and sold for Rs. 30,000. On the same date another machine was purchased for Rs. 25,000. On 1.7.2018 the second machine was sold for Rs. 23,000. Depreciate the machine at 10% on original cost. However depreciation method was changed to 15% written down value method from 2017. Show the machinery account for all calender year.

ஒரு பழைய இயந்திரத்தை 1.1.2015 அன்று ரூ. 30,000 வாங்கி ரூ. 6,000 மற்றும் ரூ. 4,000 முறையே பழுது மற்றும் நிறுத்தும் செலவுகள் செய்துள்ளனர். 1.7.2016ல் மற்றொரு இயந்திரம் ரூ. 26,000க்கு வாங்கப்பட்டது. 1.7.2017 அன்று முதல் இயந்திரம் கழிவு செய்யப்பட்டு ரூ. 30,000 விற்கப்பட்டது. அன்றைய தேதியில் இன்னொரு இயந்திரம் ரூ. 25,000 வாங்கப்பட்டது. 1.7.2018 இரண்டாவது இயந்திரம் ரூ. 23,000 விற்கப்பட்டது. தேய்மானம் வருடந்தோறும் 10% அதன் அடக்கவிலையில் செய்யப்பட்டது. ஆனால் 2017ம் வருடம் தேய்மானத்தை 15% குறைந்து செல் முறைக்கு மாற்றம் செய்யப்பட்டது. இயந்திரக் கணக்கை நாள்காட்டி வருடமுறையில் காண்பிக்கவும்.

24. Rajan maintain his accounts under single entry system. His assets and liabilities were.

	2015	2016
	Rs.	Rs.
Cash in hand	2,400	2,100
Cash at bank	25,500	27,500
Stock	28,600	31,500
Debtors	18,400	24,200
Furniture	5,000	6,000
Creditors	18,700	25,200
Outstanding expenses	2,000	–
Prepaid insurance	–	200

On October 1, 2015 Rajan brought a further capital of Rs. 10,000 on the same date he withdraw Rs. 7,000. Provide on depreciation machinery at 10%.

Calculate the amount of profit of Rajan for the year 2015 – 2016.

இராஜன் தனது கணக்குகளை ஒற்றைப் பதிவு முறையில் வைத்திருக்கிறார். அவரது சொத்துக்களும் பொறுப்புகளும் பின்வருமாறு.

	2015	2016
	ரூ.	ரூ.
கையிருப்பு ரொக்கம்	2,400	2,100
வங்கியிருப்பு கணக்கு	25,500	27,500
சரக்கிருப்பு	28,600	31,500
கடனாளிகள்	18,400	24,200
அறைகலன்	5,000	6,000
கடனீந்தோர்	18,700	25,200
கொடுபட வேண்டிய செலவுகள்	2,000	–
முன்கூட்டி செலுத்திய காப்பீடு	–	200

அக்டோபர் 1, 2015 அன்று இராஜன் மேலும் மூலதனமாக 10,000 கொண்டுவருகிறார். அதே தேதியில் அவர் ரூ. 7,000 தன் செலவினங்களுக்காக பணம் எடுக்கிறார். இயந்திர மீதான தேய்மானம் 10%.

2015 – 2016ல் இராஜன் பெறப்பட்ட இலாபத்தைக் கணக்கிடுக.
